ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2262/31 - 2022 ජනවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.13
*2262/31 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோஹித்த அபேகுணவர்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில்
அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கப்பல்களின் தொன்னளவு அளவீடு பற்றிய) ஒழுங்குவிதிகள் என, எடுத்துக்காட்டப்படலாம்.

1A - G 35897 — 510 (2022/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும் (இவ்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) 1992 மார்ச்சு 3 ஆந் திகதியன்று இலங்கையினால் ஏற்புறுதிசெய்யப்பட்ட 1969 ஆம் ஆண்டின் கப்பல்களின் தொன்னளவு அளவீடுபற்றிய சர்வதேசச் சமவாயத்துக்கும் அத்தகைய சமவாயத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தத்துக்கும் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

### பாகம் I

### இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையதாந்தன்மை

2. (1) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம், (3) ஆம் உபஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையனவும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளனவுமான கப்பல்களுக்கும், இலங்கையின் நீர்ப்பரப்புகளிலுள்ள வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) சமவாயத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:

(அ) போர்க்கப்பல்கள்; அத்துடன்

(ஆ) நீளத்தில் 24 மீற்றர்களுக்கு (79 அடிகளுக்குக்) குறையாத கப்பல்கள்.

(3) சமவாயத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், கேப் டெஸ் றொசியேர்ஸிலிருந்து அன்டிகொஸ்ட்டித் தீவின் மேற்குப்புள்ளிக்கு வரையப்பட்ட ஒரு சரிகுறுக்கைக் கோடாகக் கிழக்கு வரை வட அமெரிக்காவின் பெரிய ஏரிகள் மற்றும் சென்ட் லோரன்ஸ் ஆற்றிலும் மற்றும் அன்டிகொஸ்ட்டித் தீவின் வடக்குப்பக்கத்தில், 63 ஆவது உச்சிவட்ட வரை மற்றும் கஸ்பியன் கடலிலும் அல்லது பண்ட்டா ராசா (கபோ சன் அன்டோனியோ), ஆர்ஜன்ட்டீனா மற்றும் பண்ட்டா டெல் எஸ்ட்டி, உருகுவே என்பவற்றுக்கிடையே வரையப்பட்ட ஒரு சரிகுறுக்கைக் கோடாகக் கிழக்குவரை பிளேட், பறண மற்றும் உருகுவே ஆறுகளிலும் மட்டும் நீர்வழிப்போக்குவரத்தில் ஈடுபகின்ற இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

3. (1) ஏதேனும் கடற்பயணத்தின்மீது புறப்படும் நேரத்தில் சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கமையவிராத கப்பலொன்று, காலநிலையின் அழுத்தம் காரணமாக அல்லது தடுக்கொணா வல்இக்கட்டின் வேறேதேனும் காரணத்துக்காக அதன் உட்கருதப்பட்ட கடற்பயணத்திலிருந்து ஏதேனும் விலகல் காரணமாக அத்தகைய ஏற்பாடுகளுக்கு அ மைந்ததாக வருதலாகாது.

(2) சமவாயத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்குவதில், பணிப்பாளர் தலைமையதிபதி, காலநிலையின் அழுத்தம் காரணமாக அல்லது தடுக்கொணா வல்இக்கட்டின் வேறேதேனும் காரணத்துக்காக ஏதேனும் கப்பலுக்கு ஏற்படுத்தப்பட்ட விலகல் அல்லது தாமதத்துக்கு உரிய கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

### பாகம் II

### சான்றுப்படுத்துகையும் சோதனையும்

4. (1) இவ்வொழுங்குவிதிகளின் பாகம் III கிணங்க முழுமொத்த மற்றும் ே தறிய தொன்னளவுகளைத் தீர்மானித்தல், (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நிறைவேற்றுப்படுதல் வேண்டும்.

(2) எந்தக் கப்பலின் முழுமொத்த மற்றும் தேறிய தொன் அளவுகள் இவ்வொழுங்குவிதிகளின் பாகம் III றுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளனவோ அந்த ஒவ்வொரு கப்பலுக்கும் பணிப்பாளர் தலைமையதிபதி சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம், (2) ஆம் உபஒழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க (இவ்வொழுங்குவிதிகளில் "ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஏதேனும் ஒழுங்கமைப்பை ஏற்றங்கீகரிக்கலாம்.

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, சான்றிதழுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

(4) சான்றிதழானது சமவாயத்தின் பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ள படிவத்தில் வரையப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆங்கிலமொழியில் இருத்தலும் வேண்டும்.

5. (1) பணிப்பாளர் தலைமையதிபதி ஒப்பந்தஞ் செய்கின்ற அரசாங்கமொன்றின் கோரிக்கையின் பேரில் கப்பலொன்றின் முழுமொத்த மற்றும் தேறிய தொன்னளவுகளைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் சமவாயத்துக்கிணங்கக் கப்பலுக்குச் சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும் அல்லது வழங்குகைக்கு அதிகாரமளித்தலும் வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அல்லது பறக்கவிடுவதற்கு உரித்துடையதாக இருக்குமோ அந்த அரசின் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் கோரிக்கையின்பேரில் அது வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்றாற்போன்று அதே வலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழின் பிரதியொன்றும் தொன்னளவுகளின் கணக்கிடுதல்களினது பிரதியொன்றும் இயன்றளவு விரைவாகப் பணிப்பாளர் தலைமையதிபதியனால் கோரிக்கை விடுக்கின்ற அரசாங்கத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒரு கப்பலின் முழுமொத்த மற்றும் தேறிய தொன்னளவுகளைத் தீர்மானிக்கும்படி ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தைக் கோரலாமென்பதுடன் சமவாயத்துக்கிணங்கக் கப்பலுக்குச் சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழை வழங்கலாம் அல்லது அதன் வழங்குகைக்கு அதிகாரமளிக்கலாம். அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் சான்றிதழ், அது இலங்கை அரசாங்கத்தின் கோரக்கையின்பேரில் வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்றாற்போன்று அதே வலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

6. (1) இவ்வொழுங்குவிதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்ட எவையேனும் விதிவிலக்குளுக்கமைய, முழுமொத்தத் தொன்னளவிலான அல்லது தேறிய தொன்னளவிலான அதிகரிப்பை அவசியமாக்கும் அத்தகையனவாக, கப்பலின் ஒழுங்கேற்பாடு, நிர்மாணம், கொள்ளளவு, இடைவெளிகளின் பாவனை, கப்பலின் பயணிச் சான்றிதழிற் சுட்டிக்காட்டப்பட்டவாறு கப்பல் ஏற்றச்செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட பயணிகளின் மொத்த எண்ணிக்கை, குறித்தளிக்கப்பட்ட சுமைவரை அல்லது கப்பலின் அனுமதிக்கப்பட்ட நீர் ஆழம் என்பவற்றில் மாற்றங்கள் இடம்பெற்றிருப்பின், சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழொன்று செல்லுபடியில்லாதொழிதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படுதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் கப்பலொன்றுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ், இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் உபஒழுங்குவிதியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, அத்தகைய கப்பல் இன்னோர் அரசின் கொடிக்குக் கைமாற்றப்படுவதன்மேல் செல்லுபடியில்லாதொழிதல் வேண்டும்.

(3) இலங்கையின் இடாப்பிலிருந்து ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் இன்னோர் அரசின் கொடிக்குக் கப்பலொன்று கைமாற்றப்படுவதன்மேல், சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழ் மூன்றுமாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு அல்லது அதனை மாற்றீடு செய்வதற்கு ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கம் இன்னொரு சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழை வழங்கும்வரை, இவற்றுள் எது முன்னர் இடம்பெறுகின்றதோ அதுவரை, வலுவில் இருத்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி, சான்றிதழினதும் இயைபான தொன்னளவுக் கணக்கிடுகைகளினதும் பிரதியொன்றை, கப்பலானது எந்த ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்துக்குக் கைமாற்றப்பட்டுள்ளதோ அந்த ஒப்பற்தஞ்செய்கின்ற அரசாங்கத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

7. ஓர் ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ், சமவாயத்தினால் மேவப்பட்ட எல்லா நோக்கங்களுக்காகவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அவற்றினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களைப் போன்று அதே வலுவைக் கொண்டிருப்பனவாகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அவை கருதப்படுதல் வேண்டும்.

8. (1) இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் உள்ளபோது வெளிநாட்டுக் கப்பல் ஒன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் சோதனைக்கு அமைந்ததாக்கப்படுதல் வேண்டும்.

(2) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சோதனைகள் பின்வருவனவற்றைச் சரிபார்க்கும் நோக்கத்துக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(அ) கப்பலுக்குச் செல்லுபடியான சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதென்றும்; அத்துடன்

(ஆ) கப்பலின் பிரதான பண்புகள் சான்றிதழில் கொடுக்கப்பட்ட தரவுக்கு நேரொத்தனவாக உள்ளதென்றும்

(3) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சோதனை கப்பலுக்கு ஏதேனும் தாமதத்தை விளைவித்தலாகாது.

(4) முழுமொத்தத் தொன்னளவில் அல்லது தேறிய தொன்னளவில் அதிகரிப்பொன்றை ஏற்படுத்தும் வகையில் கப்பலின் பிரதான பண்புகள் சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழில் உள்ளவற்றிலிருந்து வித்தியாசப்படுகின்றனவெனச் சோதனை வெளிக்காட்டும்போது, கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசின் அரசாங்கத்துக்குத் தாமதமின்றி அறிவிக்கப்படுதல் வேண்டும்.

9. சமவாயத்தின் சிறப்புரிமைகள், கப்பலானது இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட செல்லுபடியான சான்றிதழை வைத்திருந்தாலொழிய, ஏதேனும் கப்பலுக்குச் சாதகமாக உரிமைகோரப்படக் கூடாது.

10. பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை ஒழுங்கமைப்புக்கு அறிவிப்பதற்கும் அதன் வைப்பிலிடுவதற்கும் பொறுப்பேற்றல் வேண்டும்:-

(அ) ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கங்களுக்குச் சுற்றிவழங்குவதற்காகச் சமவாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட அவற்றின் சான்றிதழ்களினது போதிய எண்ணிக்கையினவான மாதிரிகள்;

(ஆ) சமவாயத்தின் நோக்கெல்லையினுள்ளான பல்வேறு கருமங்களின்மீதும் இலங்கையினால் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்கள், கட்டளைகள், தீர்வைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வேறு சாதனங்களின் உரை; அத்துடன்

(இ) தொன்னளவுகள் தொடர்பான கருமங்களில் பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளின் நிரல்.

## பாகம் III

## கப்பல்களின் முழுமொத்த மற்றும் தேறிய தொன்னளவைத் தீர்மானித்தல்

11. (1) ஒரு கப்பலின் தொன்னளவு முழுமொத்தத் தொன்னளவையும் தேறிய தொன்னளவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒரு கப்பலின் முழுமொத்தத் தொன்னளவு (முதொ), சமவாயத்தின் 3 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு கப்பலின் தேறிய கொள்ளளவு (தேதொ), சமவாயத்தின் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளினது ஏற்புடைமையை நியாயமற்றதாக்கும் அல்லது செயல்முறைக் குகந்ததற்றதாக்கும் அத்தகையனவான நிர்மாணஞ்சார் சிறப்புக்கூறுகளைக் கொண்டுள்ள புதிய வகையினவான கலன்களின் முழுமொத்தத் தொன்னளவும் தேறிய தொன்னளவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும். தொன்னளவு அவ்வாறு தீர்மானிக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட முறைபற்றிய விபரங்களை ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

12. (1) சான்றிதழின் வழங்குகையை அவசியமாக்குகின்ற தேறிய தொன்னளவின் மாற்றம் - சமவாயத்தின் 3 ஆம், 4 ஆம் ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு V, Vc, d, N1 அல்லது N2 இன் பெறுமதிகளிலான மாற்றியமைத்தல் செய்யப்படும்போதும் அத்தகைய மாற்றியமைத்தல் சமவாயத்தின் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறாகத் தேறிய தொன்னளவிலான அதிகரிப்பை விளைவிக்குமிடத்தும் புதிய பண்புகளுக்கு நேரொத்ததாகக் கப்பலின் புதிய தேறிய தொன்னளவு தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தாமதமின்றி ஏற்புடையதாக்கப்படுதலும் வேண்டும்.

(2) சமவாயத்தின் உப்பந்திகள் (2) (அ) மற்றும் (2) (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட சுமைவரைகள் ஒருங்கிணையாகக் குறித்தளிக்கப்படுகின்ற கப்பலொன்றுக்குச் சமவாயத்தின் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறு ஒரு தேறிய தொன்னளவு மட்டுமே கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தொன்னளவு, கப்பலானது எந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றதோ அந்த வியாபாரத்துக்காகத் தோதான குறித்தளிக்கப்பட்ட சுமைவரைக்கு ஏற்புடையற்பாலதான தொன்னளவாக இருத்தலும் வேண்டும்.

(3) சமாவாயத்தின் 3 ஆம், 4 ஆம் ஒழுங்குவிதிகளில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு V, Vc, d, N1 அல்லது N2 போன்ற கப்பலொன்றின் பண்புகள் மாற்றியமைக்கப்படும்போது அல்லது இவ்வொழுங்விதியின் உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான குறித்தளிக்கப்பட்ட சுமைவரையானது கப்பல் எந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதோ அந்த வியாபாரத்திலான மாற்றம் காரணமாக மாற்றியமைக்கப்படும்போதும் சமவாயத்தின் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் போதிய தொன்னளவிலான குறைப்பொன்று அத்தகைய மாற்றியமைத்தல் காரணமாக ஏற்படுமிடத்தும், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தேறிய தொன்னளவை உள்ளடக்குகின்ற புதிய சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழ் (1969), நடைமுறையிலுள்ள சான்றிதழ் எத்தேதியன்று வழங்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் கழியும்வரை வழங்கப்படுதலாகாது; ஆயின், இத்தேவைப்பாடு பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:

(அ) கப்பலானது இன்னோர் அரசின் கொடிக்குக் கைமாற்றப்பட்டால், அல்லது

(ஆ) குறித்தளிக்கப்பட்ட சுமைவரையின் மாற்றியமைத்தலைத் தேவைப்படுத்துகின்ற மீயுயர் கட்டமைப்பை அகற்றுதல் போன்ற பாரிய பண்பைக் கொண்டதாக இருக்கின்றதெனப் பணிப்பாளர் தலைமையதியினால் கருதப்படுகின்ற மாற்றியமைத்தல்களுக்கு அல்லது திரிபுகளுக்குக் கப்பல் உட்பட்டால், அல்லது

(இ) விசேட வியாபாரங்களிலுள்ள பொரும் எண்ணிக்கையினரான படுக்கையற்ற பயணிகளை ஏற்றிச்செல்வதில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பயணிக் கப்பல்களுக்கு.

13. (1) முழுமொத்த மற்றும் தேறிய தொன்னளவுகளைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட எல்லா அளவுகளினதும் கணக்கிடுகை, உலோகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களின் புறக்கூட்டினது உட்புறத்துக்கு அல்லது கட்டமைப்புச்சார் எல்லைத் தகடிடுகையின் உட்புறத்துக்கும், அல்லது வேறேதேனும் பொருளினால் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களின் புறக்கூட்டினது வெளிப்புற மேற்பரப்புக்கும் அல்லது கட்டமைப்புச்சார் எல்லை மேற்பரப்புகளின் உட்புறத்துக்கும் காப்பிடல் அல்லது அதைப்போன்றது பொருத்தப்பட்டிருப்பதனைப் பொருட்படுத்தாது, அளவீடு செய்யப்படுதல் வேண்டும்.

*(2) இணைப்புக்களின் அளவுகள் மொத்த அளவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.*

*(3) கடலுக்குத் திறந்தனவாகவுள்ள இடைவெளிகளின் அளவுகள் மொத்த அளவிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டும்.*

*14. (1) அளவுகளைக் கணக்கிடுவதில் பயன்படுத்தப்பட்ட எல்லா அளவீடுகளும் மிகக்கிட்டிய சென்ரிமீற்றருக்கு அல்லது ஓர் அடியின் இருபதிலொரு பங்குக்கு எடுக்கப்படுதல் வேண்டும்.*

*(2) சம்பந்தப்பட்ட இடைவெளிக்காகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளின்மூலமும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவுள்ள செம்மையுடனும் அளவுகள் கணக்கிடப்படுதல் வேண்டும்.*

*(3) இலகுவான சரிபார்த்தலை அனுமதிக்கும் வகையில் கணக்கிடுகையானது போதியளவு விரிவானதாகவிருத்தல் வேண்டும்.*

**பாகம்** IV

**பொது**

*15. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்திமூன்றாம் ஆண்டின் கப்பல்களிலிருந்தான தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேசச் சமவாயம் தொடர்பாக 1978 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினால் திரிபுபடுத்தப்பட்டவாறு, அச்சமவாயத்தின் பின்னிணைப்பு* I *இன் 18 ஆம் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகுகின்ற தனிப்படுத்தப்பட்ட அடிச்சுமைத் தாங்கிகள் எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களில் ஏற்பாடுசெய்யப்படுமிடத்து, இத்தாங்கிகளின் மொத்தத் தொன்னளவைச் சுட்டிக்காட்டுகின்ற பதிவீடு சர்வதேசத் தொன்னளவுச் சான்றிதழின்மீது (1969) செய்யப்படலாம், அத்தகைய தனிப்படுத்தப்பட்ட அடிச்சுமையின் தொன்னளவு பின்வரும் சூத்திரத்திற்கிணங்கக் கணக்கிடப்படுதல் வேண்டும் -*

$$\mathbf{K_1 \times V_b}$$

$K_1 = 0.2 + 0.02 \log_{10} V$ ஆகவிருக்குமிடத்து

**V** = *சமவாயத்தின் 3 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு கனமீற்றர்களில் கப்பலின் எல்லா அடைக்கப்பட்ட இடங்களினதும் மொத்த அளவு; அத்துடன்*

**Vb** = *சமவாயத்தின் 6 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க கனமீற்றர் அளவீடுகளில் தனிப்படுத்தப்பட்ட அடிச்சுமைத் தாங்கிகளின் மொத்த அளவு.*

*16. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம்விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.*

*17. பணிப்பாளர்தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தும் நியமங்களை வழங்கலாம்.*

*18.* இவ்வொழுங்குவிதிகளில் -

"முழுமொத்தத் தொன்னளவு" என்பது, தற்போதைய சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட ஒரு கப்பலின் ஒட்டுமொத்த அளவின் அளவீடு என்று பொருளாகும்;

"தேறிய தொன்னளவு" என்பது, தற்போதைய சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட ஒரு கப்பலின் பயனுள்ள கொள்ளளவின் அளவீடு என்று பொருளாகும்;

"ஒழுங்கமைப்பு" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.